# VELLORE DISTRICT

11

## முதல் இடைப்பருவ தேர்வு - 2024
## பொருளியல்
## விடைக் குறிப்புகள்

*PREPARED BY*
**Dr. C. SUDHAKAR M.A., M.Phil., B.Ed.,Ph.D**
**GBHSS USSOOR**
**K. SUDHAKAR M.A., B.Ed.,**
**GHSS PANAMADANGI**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1** | இ | பற்றாக்குறை | **6** | ஆ | இயங்கும் தன்மையுடையது |
| **2** | இ | இராபின்ஸ் | **7** | அ | வெளிப்படையான |
| **3** | அ | தரவரிசை ஆய்வு | **8** | ஆ | திட்ட |
| **4** | ஈ | மார்ஷல் | **9** | அ | MC = MR |
| **5** | இ | தொழிலமைப்போர் | **10** | ஆ | முற்றுரிமை |

11. 1.பொருளியல் "ஆய்க்கனோமிக்ஸ்" என்னும் கிரேக்க சொல்லிலிருந்து வந்தது.
2.பொருளியல் என்றால் இல்லங்களின் நிர்வாகம் என்று பொருள்படும்

12. மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி பயன்பாடு எனப்படும்

13. இரு பண்டங்களின் வெவ்வேறு அளவுகளில் ஒருமித்த நுகர்வில் சம அளவு நிறைவைத் தரும் புள்ளிகளின் குவியிடமே சமநோக்கு வளைகோடு எனப்படும்.

14. உழைப்பு என்பது உற்பத்தி காரணியான உழைப்பாளர் வருமானம் ஈட்டுவதற்காக தனது உழைப்பு சக்தியை பயன்படுத்துவதாகும் ஆல்பிரட் மார்ஷல்

15. 1.ஒரு பண்டத்தின் விலை அதிகரித்தால் அளிப்பும் அதிகரிக்கும் விலை குறைந்தால் அளிப்பும் குறையும்
2. விலைக்கும் அளிப்பிற்கும் நேரடி தொடர்பு உள்ளது
3. எனவே அளிப்புக்கோடு மேல் நோக்கி செல்லும்.

16. பொருளியலில் அங்காடி என்பது பண்டங்களையும் பணிகளையும் பரிமாற்றம் செய்திட வாங்குவோரும் விற்போரும் இணையும் இடத்தை குறிக்கும்.

**17.** ***மீட்டு எடுக்க முடியாத கடந்த கால செலவுகள் அமிழ்த்தப்பட்ட செலவுகள் ஆகும்.***

18. ***நுண்ணியல் பொருளியல்***
1. தனி பண்டத்தின் விலை, தனிப்பட்ட நிறுவனங்கள், தனி குடும்பங்கள் பற்றி ஆராய்கிறது.
2. இது விலைக் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது.

***பேரியல் பொருளியல்***
1. நாட்டின் ஒட்டு மொத்த செயல்பாடுகளைப் பற்றி ஆராய்கிறது.
2. இது வருவாய் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது.

19. "ஒரு பொருளை வாங்காமல் இருப்பதைவிட வாங்குவதே மேல் என முடிவு செய்து, கொடுக்கநினைக்கும் விலைக்கும், நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசமே நுகர்வோர் எச்சம்" எனப்படும். ***ஆல்பிரட் மார்ஷல்.***

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

20. 1. சமநோக்கு வளைகோடு கீழ்நோக்கிய சரிவை கொண்டது.
2. சமநோக்கு வளைகோடு தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.
3. சமநோக்கு வளைகோடு ஒன்றை ஒன்று வெட்டிக்கொள்ளது.
4. சமநோக்கு வளைகோடுகள் X அச்சையோ Y அச்சையோ தொடாது.

21. 1. நிலம் என்பது முதன்மை உற்பத்திக் காரணி
2. நிலம் அசைவற்றது
3. நிலம் என்பது இயற்கையின் கொடை
4. நிலத்தின் அளிப்பு மாறாது.
5. நிலம் அழிவில்லாதது.

22. **1. துவக்கப்பணி**-தொழில் முனைவோர் தொழிலை தொடங்குவது முக்கிய பணியாகும்
**2.புத்தாக்கப்பணி** - தொழில் முனைவோர் புதிய தொழில் நுட்பம் புகுத்துபவர்
**3.ஒருங்கிணைத்தல்** - தொழில் முனைவோர் சரியான உற்பத்தி காரணி கலவையை பயன்படுத்துபவார்
**4.கட்டுப்படுத்துதல், வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையிடுதல்** - தொழில் முனைவோர் தொழிலை நெறிபடுத்தும் பணியை செய்கிறார்
**5. இடர்பாடுகளை ஏற்றல் மற்றும் நிச்சயமற்ற தன்மை** - தொழில் முனைவோர் தொழிலில் ஏற்படும் பிரச்சனையை எதிர்கொள்வார்

23. (i) அடுத்த சிறந்த மாறுபட்ட செலவைக் குறிக்கும். (சில வாய்ப்புகளை இழப்பதால் ஏற்படும் செலவு)
(ii) ஒரு பண்டத்தின் சிறந்த பயன்பாடு தேர்ந்தெடுக்கப்படுவதால் அதனுடைய அடுத்த சிறந்த பயன்பாடு விட்டு கொடுக்க வேண்டும்.
(iii) எ.கா : 1. ஒரு விவசாயி தன்டைய நிலத்தில் நெல் அல்லது கரும்பு ஏதேனும் ஒன்றை மட்டும் பயிர் செய்ய முடியும். 2. TVயை தொடர்ந்து பார்த்தால் கூடுதல் மதிப்பெண் பெற முடியாது.

**24. (i) தனிப்பட்ட இரு விற்பனையாளர்களைக் கொண்டுள்ளது. இருவரும் போட்டியாளரின் செயல்பாடுகளை அறிந்திருப்பர்.**
**(ii) இரண்டு விற்பனையாளரும் உடன்பாடு செய்திருப்பர்.**
**(iii) இருவரும் விலை மற்றும் உற்பத்தியில் சுதந்திரம் பெற்றிருப்பர், பண்டங்களில் வேறுபாடு இல்லை.**
**(iv) இருவரும் கடினமான போட்டியில் ஈடுபடலாம்**
**(v) எ.கா : கொக்ககோலா (Coca-Cola), பெப்சி (Pepsi) விசா அட்டை (Visa Card), மாஸ்டர் அட்டை (Master Card)**

25 **1.ஆடம் ஸ்மித்** : ஒரு நாட்டின் செல்வம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது மற்றும் அதிகரிக்கப்படுகிறது என்பதை விளக்குகின்றார்.
**2.ஆல்பிரட் மார்ஷல் :** மனிதன் முதலில் நலத்தையே மேம்படுத்த முயல்கிறான் செல்வத்தை அல்ல என்கிறார்.
**3.இலயனல் இராபின்சன் :** மனித விருப்பங்கள் எண்ணற்றவை. விருப்பங்களை நிறைவு செய்யும் வளங்கள் பற்றாக்குறையானவை பற்றாக்குறை தெரிவுசெய்தலுக்கு வழிவகுக்கிறது. எனவே ராபின்சனின் கூற்றுப்படி பொருளியல் தெரிவு செய்யும் அறிவியல் ஆகும்.
**4.பால் ஏ.சாமுவேல்சன் :** பொருளாதாரத்தின் உட்பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. காலத்தை உள்ளடக்கியதால் இவரின் இலக்கணம் வளர்ச்சியை உள்ளடக்கியதாக உள்ளது. இவர் பொருளியலை சமூக அறிவியலாக கருதினார்.

**(அல்லது)**

தேவை விதியை முதலில் 1838 ல் **அகஸ்டின் கூர்னாட்** விளக்கினார்.
**இலக்கணம்,**
"விலை குறையும்போது தேவையின் அளவு அதிகரிக்கிறது விலை அதிகரிக்கும்போது தேவையின் அளவு குறைகிறது" **ஆல்பிரட் மார்ஷல்.**

**எடுகோள்கள்**

1. நுகர்வோரின் வருமானம், விருப்பம் மற்றும் சுவையில் மாற்றம் இல்லை.
2. பிற பொருட்களின் விலையில் மாற்றம் இல்லை.
3. பிற பதிலிகள் இல்லை.
4. பொருளின் தரத்தில் மாற்றம் இல்லை

**அட்டவணை**

**வரைபடம்**

**தேவை விதியின் விதிவிலக்குகள்**

விலை குறைவு தேவை சுருக்கத்தையும் விலை உயர்வு தேவை விரிவையும் ஏற்படுத்தும். இந்நிலையில் தேவை கோடு இடமிருந்து வலமாக மேல் நோக்கி உயரும். இது விதிவிலக்கான தேவை கோடு என அழைக்கப்படுகிறது.

**வரைபடம்**

26. ஆஸ்திரிய பொருளியல் வல்லுநரான H.H. காசன் என்பவர் இவ்விதியை 1854-இல் பொருளியலில் முதன்முதலாக உருவாக்கினார். எனவே ஜெவான்ஸ் இவ்விதியை "காசனின் முதல் நுகர்வு விதி" என அழைத்தார்.

**இலக்கணம்.**

"ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது" **ஆல்பிரட் மார்ஷல்.**

**எடுகோள்கள்.**

1. பயன்பாட்டை அளவிட முடியும்.
2. பணத்தின் இறுதிநிலை பயன்பாடு மாறாது.
3. பண்டங்கள் ஒரே தரமானவை.
4. கால இடைவெளி இன்றி தொடர்ந்து நுகர வேண்டும்.
5. பழக்கவழக்கங்கள் மற்றும் வருமானத்தில் மாற்றமில்லை.

**விதியின் எடுத்துக்காட்டு விளக்கம்.**

ஒரு நுகர்வோர் 7 ஆப்பிள்களை ஒன்றன்பின் ஒன்றாக நுகர விரும்புகிறார். முதல் ஆப்பிள் சாப்பிடும் போது அவருக்கு அதிக பயன்பாடு கிடைகிறது. மேலும் ஐந்தாவது ஆப்பிளில் இருந்து பெற்ற பயன்பாடு பூஜ்ஜியம் ஆகும். ஆறாவது, ஏழாவது ஆப்பிளை நுகர்ந்தால் அவர் பெறுவது எதிர்மறை பயன்பாடாகும்.

**அட்டவணை**

**வரைபடம்**

**வரைபட விளக்கம்**

1. மொத்த பயன்பாடு உச்சத்தில் இருக்கும்போது, இறுதிநிலை பயன்பாடு பூஜ்ஜியமாக இருக்கும்.
2. மொத்த பயன்பாடு குறையும்போது, இறுதிநிலை பயன்பாடு எதிர்மறையாக இருக்கும்.

**முக்கியத்துவம்.**

1. பொருளியலில் பல விதிகளுக்கு இது அடிப்படை ஆகும்.
2. நிதி அமைச்சருக்கு உதவுகிறது.

**திறனாய்வு.**

1. பயன்பாட்டை அளவிடமுடியாது.
2. தொடர்ந்து நுகர்வது நடைமுறைக்கு சாத்தியமில்லை.

**(அல்லது)**

பொருளாதார சிக்கனங்கள் என்பது பேரளவு உற்பத்தியில் ஏற்படும் செலவு சார்ந்த நன்மைகள் ஆகும்.

**பொருளாதார சிக்கனங்கள் இரு வகைப்படும் அவை**

1. அகச் சிக்கனங்கள் 2. புறச் சிக்கனங்கள்.

**1. அகச் சிக்கனங்கள்.**

a) தொழில்நுட்பச் சிக்கனங்கள்.
b) நிதிச் சிக்கனங்கள்.
c) உழைப்புச் சிக்கனங்கள்.
d) சந்தை சார்ந்த சிக்கனங்கள்.

**2. புறச் சிக்கனங்கள்**

a) மேம்பட்ட போக்குவரத்து வசதிகள்.
b) வங்கி செயல்பாடு சார்ந்த வசதிகள்.
c) தகவல் மற்றும் தொலைத்தொடர்பு வளர்ச்சி.

www.Padasalai.Net

27 **1.எண்ணற்ற வாங்குபவர் மற்றும் விற்போர்:** வாங்குபவர் மற்றும் விற்பவர் அதிகம் ஆனால் எந்த ஒரு விற்பனையாளரும் விலையை நிர்ணயம் செய்யும் சக்தி பெற்றிருக்கமாட்டார், வாங்குபவரைப் போன்றே விற்பனையாளரும் விலை ஏற்பவர் ஆவார்.

**2.ஒரே மாதிரியான விலை:** முற்றிலும் பதிலீட்டு பண்டகளாக இருக்கும், எனவே ஒரே மாதிரியான விலை நிலவும்.

**3.உள்ளே வருதல் மற்றும் வெளியேறுதலில் தடை இல்லை:** குறுகிய காலத்தில் அதிக இலாபத்தை கண்டு புதிய நிறுவனம் உள்ளே நுழையும், இழப்பு அடையும் போது நிறுவனங்கள் அங்காடியை விட்டு வெளியேறும்.


**4.போக்குவரத்து செலவில்லை:** போக்குவரத்து செலவு இல்லாத காரணத்தால் ஒரே மாதிரியான விலை இருக்கின்றது.

**5.உற்பத்தி காரணிகள் இடம் பெயரும்:** ஒரு தொழிலிலிருந்து மற்றொரு தொழிலுக்கு உற்பத்தி காரணிகள் மாறுவதற்கு முழு சுதந்திரம் உண்டு.

**(அல்லது)**

**விலை மாறாத போது AR மற்றும் MR கோடுகள் (நிறைவுப் போட்டி)**

| விற்பனை (Q) | AR/P | TR | MR |
|---|---|---|---|
| 1 | 5 | 5 | 5 |
| 2 | 5 | 10 | 5 |
| 3 | 5 | 15 | 5 |
| 4 | 5 | 20 | 5 |
| 5 | 5 | 25 | 5 |
| 6 | 5 | 30 | 5 |





நிறைவுப் போட்டியில் ஒரே விலை நிலவுவதால் AR மற்றும் MR கோடுகள் ஒரே கோடாக இருக்கும்.

**P = AR = MR**

**விலை மாறும் போது AR மற்றும் MR கோடுகள் (நிறைகுறைப் போட்டி)**

| விற்பனை (Q) | AR/P | TR | MR |
|---|---|---|---|
| 1 | 10 | 10 | 10 |
| 2 | 9 | 18 | 8 |
| 3 | 8 | 24 | 6 |
| 4 | 7 | 28 | 4 |
| 5 | 6 | 30 | 2 |
| 6 | 5 | 30 | 0 |
| 7 | 4 | 28 | -2 |
| 8 | 3 | 24 | -4 |
| 9 | 2 | 18 | -6 |
| 10 | 1 | 10 | -8 |




விலை மாறும் போது விலை பேதம் காட்டப்படும். எனவே AR கோட்டிற்கு கிழே MR கோடு இருக்கும்.